பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை: 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர் : 15] சென்னை : ஐப்பசி 1உ (18—10—67) புதன் வெளியூர் : ஐப்பசி 2உ (19—10—67) வியாழன் [இதழ் : 104

வைகை கரை புரளுகிறது!

நெல் உயரத் தமிழகத்தில் நீர் மட்டம் உயருகிறது

பெரியாறு பகுதியில் பெய்த கனத்த பெரு மழையின் காரணமாக வைகை நதியில் நீர்ப் பெருக்கு ஏற்பட்டு இரு கரைகளையும் தொட்டுச் செல்கிறது—புதுவெள்ளம்!

வைகையினால் வளம் பெறும் இராமநாதபுரம் ஏரிகள் அனைத்திலும் நீர் நிரம்பியுள்ளன!

கடந்த ஞாயிறன்று பெரியாறு தேக்க நீர் மட்டம் 115.15 அடிக்கு உயர்ந்தது; வைகையின் நீர் மட்ட அளவு 35.9 அடி.

'ஆறு மாத சாதனைக்கு ஈடு காட்டுங்கள்---பார்க்கலாம்'

காங்கிரசாருக்கு அண்ணா அறைகூவல்

சென்னை, அக். 18—

"இருபது ஆண்டு ஆட்சிக் காலத்தில் நடந்தவற்றில், இந்த ஆறு மாதத்தில் என்ன கெட்டுவிட்டது என்று அவர்களே (காங்கிரசாரே) சொல்லட்டுமே! நல்ல நிர்வாகத் திறனுள்ளோர் குழு ஒன்றை அமைத்து ஆராய்வோம்.

"இந்த ஆறு மாதத்திய தி. மு. கழக ஆட்சி செய்துள்ள அளவு காரியங்கள் இதற்கு முன் காங்கிரசு ஆண்டபோது எந்த ஒரு 6 மாதத்திலாவது நடந்ததுண்டா ... வர்கள் ஆராய்ந்து சொல்லட்டும்—ஒப்புவமை காட்டிச் ... ட்டும்—பார்க்கலாம்!

"உங்கள் ஆட்சியில் ஒரு 6 மாதத்தை ... ண்டுமானாலும் தேர்ந்தெடுத்துச் சாதனைப் பட்டியலை வை ... ர்களா? அதற்குத் தட்டி எழுதி வையுங்கள்—அதற்கான தட்டிகளை வேண்டுமானால் நாங்களே செய்து தருகிறோம்"

என்று முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், நேற்று திருவல்லிக்கேணியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் காங்கிரசுக்காரர்களுக்கு அறைகூவல் விடுத்தார்கள்.

சென்னை 75-வது வட்ட தி.மு.க. சார்பில் திருவல்லிக்கேணி தேரடித் திடலில் நடைபெற்ற இந்தப் பொதுக்கூட்டத்துக்குத் தோழர் பொ. மாணிக்கம் தலைமைவகித்தார்.

தோழர்கள் மு. க. வரதன், ச. அமுதன், விருதை பெ. சீனிவாசன் எம்.எல்.ஏ., மு. வரதராசன், பட்சிராசகோபாலன், ஆதிகேசவன், தேவநாதன், முரசொலி மாறன், உள்ளாட்சி அமைச்சர் மா. முத்துசாமி, பேராசிரியர் க. அன்பழகன் எம்.பி. ஆகியோர் பேசினர்.

மீண்டும் வர முயலுகிறது !

அண்ணா அவர்கள பேசுகையில் மேலும் குறிப்பிட்டதாவது :—

"'இருபதாண்டுகள் ஒரே ஒரு கட்சியின் ஆட்சி நடக்கிறது; அவர்கள் பேச்சே சட்டம் என்றுள்ளது; சில காலம்தான் இதை மாற்றுவோமே' என்று கருதிய நீங்கள், எங்களைத் தேர்ந்தெடுத்தீர்கள்! எங்கள் மூலம் உங்களது அதிருப்தியை வெளிப்படுத்தினீர்கள். சர்வாதிகாரம் ஒழியவேண்டுமென்று நினைத்தீர்கள்!

அகற்றி ஆறு திங்களுக்குள் ஆர்ப்பரித்துக்கொண்டு மறுபடியும் வர முயலுகிறது அந்தச் சர்வாதிகாரம்!

தமிழ்நாடுதான் தகுதியானது !

"பிப்ரவரியில் போய்விட்டதாக நாம் எண்ணிக்கொண்டிருந்த சர்வாதிகாரப் பேய், இப்போது மறுபடியும் வர முயலுகிறது!

அரசியலில் சர்வாதிகாரத்தை ஒழிக்க ஏதாவது ஒரு இடம் தகுதியாவது என்றால் அது தமிழ்நாடுதான்! இங்கே அதைச் செய்ய இயலாவிட்டால், இந்தியாவில் வேறு எங்கும் செய்ய இயலாது!

கடந்த தேர்தலில் தமிழ் நாட்டில் மட்டுமல்லாமல் கேரளத்தில்—மேற்கு வங்கத்தில்—பீகாரில்—பஞ்சாபில்—உத்தரப் பிரதேசத்தில்—இப்படிப் பல மாநிலங்களில், இச்சர்வாதிகாரம் அகற்றப்பட்டது! போன வாரம் மணிப்பூரில் அகற்றப்பட்டது!

'விடமாட்டேன்' என்கிறாரே!

சனநாயகம் இன்னதென்று அறிந்த அறிவாளர்களெல்லாம் 'இது சரியானதே' என்கிறார்

(4-ம் பக்கம் பார்க்க)

இட்லரின் வாரிசுகளாக இங்கே இருந்தவர்கள்!

"சர்வாதிகாரிகளாக உள்ளவர்கள், அறிவெல்லாம் தங்களிடமே உருண்டு திரண்டு வந்திருப்பதாக எண்ணிக்கொண்டு பிறரைக் கேலி பேசுவார்களாம்!

"இட்லர்கூட இப்படித்தான் தனது இராணுவத் தளபதிகளிடம் கேலி பேசியிருக்கிறான் என்று நான் படித்திருக்கிறேன்; களத்திலே உள்ள இராணுவத் தளபதிகளைத் தன்னிடம் அழைப்பானாம்; அதற்கு முன்னதாக, களத்தைப் பற்றிய சில்லறைத் தகவல்களை அறிந்து வைத்துக்கொண்டு தளபதிகளை அதுபற்றிக் கேட்பானாம்; தளபதியின் சட்டையிலுள்ள பொத்தான்களின் எண்ணிக்கையைக் கேட்பானாம்.

(4-ம் பக்கம் பார்க்க)

மாலை நேர வீரத்தை மலிவு விலைக்கு விற்காதீர்!

சென்னை, அக். 17—

"'தமிழ்நாட்டிலுள்ள எங்களுக்குத் தமிழும் ஆங்கிலமும் போதும்; தேவைப்பட்டவர்கள் மட்டும் இந்தியைப் படியுங்கள்' என்றுரைத்து, அதற்கு ஏற்ற வகையில், இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் (இப்போது காமராசர் கொண்டுவருவதாகச் சொல்லும் ஆட்சி மொழிச் சட்டத்தைக் குறிப்பிடவில்லை) திருத்தப்பட வேண்டுமென்று காமராசர் சொல்லி—அதற்குச் சம்மதமில்லையென்று இந்தியப் பேரரசில் உள்ளோர் சொல்லுவதானால், 'காங்கிரசுத் தலைமைப் பதவியில் இருக்க முடியாது' என்று காமராசர் இராஜினமாச் செய்வாரானால், தமிழகத் தி. மு. கழக அமைச்சரவையும் இராஜினமாச் செய்து அவரோடு நிற்கத் தயார்!

"இதைவிட்டு, 'மாலை நேர வீரத்தை மலிவு விலையில் விற்காதீர்கள்' என்று காமராசருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்."

—அறிஞர் அண்ணா

(திருவல்லிக்கேணி கூட்டத்தில்)

'ரோடு'கள் 'ஏடு'களாகின்றன!

'கண்டதைப் படித்தால் பண்டிதனாகலாம்' என்றுதான் பெரியவர்கள் சொல்லியிருப்பதாக நினைவு!

காமராசரும் ஒரு பெரியவர்தானே! எனவே, பழமொழியை ஒரு சிறிது திருத்திக்கொண்டிருக்கிறார்—சுய அனுமதியுடன்!

கண்டதை எழுதினால் பண்டிதனாகாவிட்டாலும், 'பாராளு மன்றத்துக்கு ஓர் உறுப்பினரையாவது அனுப்பலாம்' என்று தனது சகாக்களுக்குச் சொல்லிக்கொடுத்திருக்கிறார்!

இதன்படி—தென் சென்னைத் தேர்தலையொட்டி—இனி தார் ரோடுகள், கீற்றுத் தட்டிகள் எல்லாம் முதலியன—காங்கிரசின் பிரச்சார ஆயுதங்களாக மாற இருக்கின்றன!

காமராசர் கூட்டங்களில், பொதுமக்களின் குறுக்கீடுகள் அடிக்கடி இருக்கும்; ஆனால் இந்தத் தடவை யாரும் 'ஐயா! தார் ரோடு இல்லாத இடத்தில் எங்கே—எப்படி எழுதுவது' என்று கேட்கவில்லை!

சாலை விபத்துக்கள்—'விளம்பரம் எழுதவோ ஒட்டவோ கூடாது' என்ற அறிவிப்புகள் இனி சென்னைத் தெருக்களில் அதிகரித்தால், அதற்கு—அந்த 'நியூசென்சு'களுக்குக் காமராசர்தான் பொறுப்பு!

கார்களும் பஸ்களும் போகிற பாதைகளில் காங்கிரசுத் தேர்தல் பிரச்சாரங்களை எழுதினால், போக்குவரத்தா நடைபெறும்?—விபத் ... ன் மிஞ்சும்!

'ஆ ... ம்' என் ... டு வீட்டைக் கட்டியவர்க ... ராசா ... ம்பரம் எழுதி ஒட்டவோ, ... து மாட்டவோ தங்க ... சுவர்களை அனுமதிப்பார்களா'

காங்கிரசு, தேர் ... ல் புறமுதுகு காட்டித்தானே ஓடியது? அதாவது, தோற்றது ... ாமராசருக்கு அது நினைவு வந்து 'எதுவும் வசதியில்லை என் ... ல், முதுகிலாவது தட்டி எழுதி ஒட்டிக்கொள்ளுங்கள்' என்று, முன்பே ஒரு யோசனை வழங்கியிருக்கிறார்!

பாவம்! தனது கட்சிக்காரர்களை, 'வீரமில்லாதவர்கள்' என்று எடை போட்டிருக்கிறார்! இல்லாவிட்டால், 'மார்பில் தட்டியை மாட்டிக்கொள்ளுங்கள்' என்று சொல்லியிருப்பார் அல்லவா?

"பேச வேண்டாம்; எழுதினால் போதும்" என்று, காமராசர் புதிதாகக் கூறியிருக்கும் அறிவுரையின் விளைவுகள் இவையெல்லாம்!

கூட்டங்களில் பேசுவதில் உள்ள தொல்லைகளைக் காமராசர் நூற்றுக்கு நூறு உணர்ந்திருக்கிறார்!

"ஆனால், எழுதி அல்லவா பிரச்சாரம் செய்யச் சொல்கிறார்? முடிந்தால் அவர் செய்யட்டுமே—அதை முதலில்" என்று காங்கிரசு எழுத்தாளர்கள், எடுத்த எடுப்பில் தங்கள் தலைவர் மீது கோபப்பட்டுவிடக்கூடாது!

ஏனென்றால், அவர் எழுதச் சொல்லியிருப்பது ஏடுகளில் இல்லை; ரோடுகளில்—தட்டிகளில்—சுவர்களில்!

இதில் என்ன சூட்சுமம் என்கிறீர்களா?

மேடையில் பேசுவது என்றால், 'மூகாந்திரம்' இருக்கிறது; அதாவது மக்கள் நேருக்கு நேர் கேட்கிறார்கள்—குற்றங்குறைகள் புலப்பட்டுவிடும்—'எப்போது, எப்படி' என்று!

அதைப்போல், பத்திரிகைகளில் எழுதுவதும் 'ரெக்கார்டு' ஆகிறது! இது இன்னும் ஆபத்து! எழுதுவதற்கு முன் எல்லாம் தெரிந்திருக்க வேண்டும்! எழுதி முடித்த பின்னர், அது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும்!

இப்படிப் பேசுவதும் எழுதுவதும், காங்கிரசுக்காரர்களால் முடிந்ததா? முடிகிறதா? முடியுமா?

எனவேதான் காமராசர், அனுமதேய வழிகளைத் தேர்ந்தெடுத்துக்கொண்டிருக்கிறார்—தார் ரோடு, சிமெண்டுச் சுவர் என்று!

'அச்சடித்த விளம்பரச் சுவரொட்டி' என்றுகூடச் சொல்லவில்லை அவர்—கெட்டிக்காரர்!

தார் ரோடு—சாக்பீஸ்—துண்டுக் கரி—என்றுதான் புலப்படுத்தியிருக்கிறார்!

எழுதியது யார்? எழுதியது சரிதானா?—என்பன போன்றவற்றுக்கெல்லாம், வேலை இல்லை பாருங்கள்!

அவர் பேச ஆரம்பித்தாலே போதும்—மக்கள் சிரிக்க ஆரம்பித்துவிடுகிறார்கள்! இதை எத்தனை நாட்களுக்குத்தான் பொறுத்துக்கொள்வார் பாவம்!

ஆனால் அதற்காக, 'பத்திரிகைகளில் எழுதுங்கள்' என்றும் அவரது கட்சிக்காரர்களை அவர் அனுமதிக்கத் தயாராக இல்லை! அவருக்கு எழுதத் தெரியாவிட்டாலும், அவர்களது 'எழுதும் திறமை'யைப் பற்றி அவருக்குத் தெரியும்!

எனவேதான், அனுமதேய வழிகளாக தார் ரோடையும் துண்டுக்கரியையும் காட்டியிருக்கிறார்!

சென்னை நகரம், காங்கிரசுக்காரர்களின் இந்தக் 'கைவரிசை'யையும் சந்திக்கத் தயாராகட்டும்!

—எஸ். ஆர்.

நம் நாடு

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

திருவள்ளுவராண்டு 1998 ஐப்பசி 1 (18—10—67) புதன்

சனநாயகப் பண்பு

வாழ்க்கைத் துறையில் கருத்து வேற்றுமைகள் இருப்பது இயல்பு. கருத்து வேற்றுமைகள்தான் அனைத்து வளர்ச்சிக்கும் வித்து.

அனைத்து வளர்ச்சிக்கும் வித்தாக இருந்துவருகின்ற கருத்து வேற்றுமைகள், மக்களிடை பகையையும் மோதுதலையும் விளைவித்து வருவதைக் காண்கின்றோம். இப்பகைக்கும் மோதுதலுக்கும் கருத்து வேற்றுமைகள் துளியும் காரணமல்ல.

ஒருவர் கொண்டிருக்கின்ற கருத்துக்கு மாறுதலான கருத்தை, மற்றொருவர் கொண்டிருக்கின்றார் என்பதற்காக, ஒருவருக்கொருவர் பகைத்துக்கொள்ளவும் தேவையில்லை; ஒருவரை ஒருவர் தாக்கிக்கொள்ளவும் தேவையில்லை.

கருத்துக்குக் கருத்து மோதவிட வேண்டும். அவ்வாறு மோவிதடுகின்ற அளவோடு கருத்து வேற்றுமைகளுக்கு முற்றுப் புள்ளி வைத்துவிட வேண்டும்.

'உன் கருத்து சிறந்ததா? என் கருத்து உயர்ந்ததா?' என வாதிடத்தான் வேண்டும். அவ்வாறு வாதிடுவதன் வாயிலாகத்தான் உண்மையைக் கண்டறிய முடியும்.

அவ்வாறு வாதிடுவது, அறிவை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும். குறிப்பிட்ட ஒரு பொருள் பற்றி எழுந்துள்ள பல்வேறு கருத்துக்களிலும், 'எது உண்மையானது' என்பதைக் கண்டறிய மேற்கொள்ளக்கூடிய உரையாடலில் வெப்பம் குறைந்திருத்தல் வேண்டும்—ஒளி மிகுந்திருத்தல் வேண்டும்.

அரசியல் துறையிலும் கருத்து வேற்றுமைகள் இருக்கத்தான் செய்யும். அக்கருத்து வேற்றுமைகளின் அடிப்படையில் தான், அரசியல் கட்சிகள் தோன்றி வளர்ந்தும் வருகின்றன.

மதத் துறையிலும் சமயத் துறையிலும் மாறுபட்ட கருத்தினைக் கொண்டிருந்தவர்கள், அக்கருத்து மாறுபாடுகளை முன்வைத்து, ஒருவரை ஒருவர் தாக்கிக்கொண்டிருந்த வரலாற்றினை அறியாதவர்கள் இல்லை. அத்தகைய தாக்குதல்கள் இப்பொழுது நடைபெறுவது கிடையாது. இங்கொன்றும் அங்கொன்றுமாக நிகழ்ந்துவருவதை, கவலை கொள்ளத்தக்க கணக்கில் சேர்த்துக் கொள்ளக்கூடாது.

ஆனால், அரசியல் துறையில் தலைதூக்கியுள்ள கருத்து வேற்றுமைகள், ஒருவருடன் ஒருவர் மோதிக்கொள்ளுகின்ற இழிநிலை அடைந்திருப்பதைக் காண்கின்றோம். ஒருவர் கொண்டிருக்கின்ற கருத்தில், மற்றொருவர் காண்கின்ற குறைபாடுகளைச் சுட்டிக்காட்டுகின்ற முறைதான் சிறந்த முறை. அம்முறையின் வாயிலாகத் தான், குறிப்பிட்டவர் கொண்டுள்ள அரசியல் கருத்து, 'குறைபாடு உடையது—மக்களுக்கு நன்மை பயக்கக்கூடியது அல்ல' என்ற நிலையை, மக்கள் உணர்ந்துகொள்ளச்செய்ய முடியும்.

ஒருவர் கொண்டிருக்கின்ற அரசியல் கருத்தில், மற்றொருவர் காணுகின்ற குறைபாட்டினை நயம்பட எடுத்துரைத்தல் வேண்டும்; கடுமையான சொற்களைப் பயன்படுத்தக்கூடாது.

ஒருவர் கொண்டிருக்கின்ற அரசியல் கருத்து, மற்றொருவர் கொண்டிருக்கக்கூடிய அரசியல் கருத்துக்கு முழுதும் முரண்பட்டதாக இருக்கிறது என்பதற்காக, அக்கருத்தினைக் கொண்டிருக்கின்றவரைப் பகைத்துக்கொள்ளவும் கூடாது—இழித்துப் பழித்துப் பேசவும் கூடாது.

ஆனால், இன்றையத் தமிழகம் எதைக் கண்டுவருகிறது?

நமது முன்னேற்றக் கழகம் தோன்றிய நாள்தொட்டு—ஏன், அதற்கு முன்னரேகூட—நமது இதயங்களை இருப்பிடமாக அமைத்துக்கொண்டிருக்கின்ற அறிஞர் அண்ணா அவர்களை, அவர் கொண்டிருந்த அரசியல் கருத்துக்காக—அக்கருத்தைக் கண்டிப்பது என்ற போர்வையில்—அவரையே தனித்த முறையில் இழித்தும் பழித்தும் பேசப்பட்ட பேச்சுக்கள் கொஞ்சமா?

இன்றும்தானே அதே வசைமொழிகளை, எதிரணியில் உள்ளவர்கள்—தாங்கள் பெற்றுள்ள இடத்துக்குத் தாங்கள் தகுதியில்லாதவர்கள் என்பதை விளம்பரப்படுத்தும் முறையில்—நமது தலைவர்மீது அடுக்கடுக்காக வீசி வருகின்றனர்.

எதிரணியில் இருக்கின்ற தலைவர்கள் எனப்படுகின்றவர்கள் நிலையே இதுதான் என்றால், வசை பாடுவது ஒன்றை மட்டுமே மேடைப் பேச்சாகக் கற்றுள்ள பேச்சாளர் குழாம் உமிழ்ந்து கொண்டுவருகின்ற 'அலங்காரச் சொற்கள்' மாறுபட்டா அமைந்திருக்கும்?

கருத்து வேற்றுமைக்காக, எதிரணியைச் சேர்ந்தவர்கள் மேடை ஏறி மட்டுமா கடுஞ்சொற்களையும் இழிமொழிகளையும் பொழிந்துவருகின்றனர்? 'செய்தித் தாள்கள்' என்ற பெயரிட்டு, தங்கள் வசை பாடும் வல்லமையை எழுத்தாக்கி முச்சந்திகளில் விற்றுவருகின்றனர்!

அந்த அச்சடித்த தாள்களில் மக்கள் எதைக் காண்கின்றனர்?—கழக அரசுக்குக் கருத்துமிக்க அறிவுரைகளையா? 'கழக அரசு இப்படிச் செயல்பட்டால்தான் மக்கள் நல்வாழ்வு பெறுவர்' என்ற நன்முறைகளையா?—இல்லையே! இல்லாததையும் பொல்லாததையும், நடைபெற முடியாததையும் நடைபெற்றில்லாததையும் அல்லவா—தம் மனம்போன போக்கில் கற்பனை செய்து—கழக அரசின் மீது சுமத்தி, அரசைத் தூற்றுவதற்குரிய வாய்ப்பைத் தேடி வருகின்றனர்?

"இம்முறை நல்முறை அல்ல; இன்றே இம்முறையைக் கைவிட்டொழிக" எனக் கூற, காங்கிரசுத் தலைவர்கள் இன்னும் முன்வரவில்லையே!

'எம் முறை—இதுவே எம்மியல்புக்கேற்ற முறை! இதை எப்படிக் கண்டறிந்து செயல்படுத்தி வருகின்றீர்?' என வியந்து பாராட்டி, அத்தீய முறைக்கு ஊக்கமளித்தல்லவா வருகின்றனர்—அப்பெருந்தலைவர்கள்?

ஆனால், நமது முன்னேற்றக் கழகத் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள், '**மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணமுண்டு**' என்ற கருத்தைக் கூறி, 'மாற்றுக் கருத்தையும் அம்மாற்றுக் கருத்தைக் கொண்டிருக்கின்றவர் எவரானாலும் அவரையும் மதித்திடல் வேண்டும்' என்ற நற்பண்பை நெடுநாட்களுக்கு முன்பிருந்தே தமிழகத்தில் விதைத்து, தம் அரும் உழைப்பால் வளர்த்து வருகின்றார். சனநாயகப் பண்பு எப்படி இருக்கும்?—எவ்வாறு இருந்திடல் வேண்டும்?—என்பதற்கு, தாமே ஒரு அரும் சான்றாகவும் உள்ளார்.

முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலனார் அவர்களின் 71-வது பிறந்த நாள் விழாக் கூட்டத்தில் முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் பங்கு கொண்டிருக்கின்றார். இவ்வாறு அவர் கலந்து கொண்டிருப்பதில் தனிச் சிறப்பு இருக்கின்றதோ, இல்லையோ—அவர் அவ்விழாவில் கூறியுள்ள நல்லுரை, மிகுதியான சிறப்புடையது என்பதில் ஐயமில்லை.

"ந[illegible]ட்டில் உண்மையான சனநாயகம் வளர கருத்[illegible] கொ[illegible]ப்பதும், பாரா[illegible]. தம[illegible]த்தைப் பொ[illegible]கைய [illegible]லை நடத்திச் செல்வதில் மு[illegible]னணியில் இருக்கி[illegible]

"ஒத்த கருத்தைக் கொ[illegible]வர்கள் பாராட்டிக் கொள்ளுவது ஆச்சரியமல்ல. [illegible] அவரோடு ஒத்துப் போகாதவர்கள் பாராட்டுவதுதா[illegible] தனிச் சிறப்புடையதாகும்.

"வேறு கட்சிகளைச் சார்ந்த தலைவர்கள் அரசியலில் மாறுபட்டு இருந்தாலும், நட்பு முறையில் இருந்தால்தான் சனநாயகம் வளரும்.

"இந்தக் கொள்கை இங்கிலாந்து நாட்டில் இருந்துவருகிறது. இந்த நல்ல பண்பு நம்மிடம் வர முடியாது என்று நாம் கருதினேமானால், அது சனநாயகப் பண்பாகாது!"

—[illegible]

காங்கிரசுக் கட்சித் தேர்தல்கள்

தள்ளிப் போடப்படலாமாம்

புதுடில்லி, அக். 18—

காங்கிரசுக் கட்சியின் அமைப்புத் தேர்தல்கள், எல்லா மாநிலங்களிலும் சில மாதங்களுக்குத் தள்ளிப் போடப்படலாம்.

தேர்தலை தள்ளிப் போட வேண்டுமென கட்சியின் முக்கிய தலைவர்கள் பலர் கூறியுள்ளனர்; இதற்குத் தலைமை அமைச்சர் இந்திரா காந்தி இணங்கினால், தேர்தல் தள்ளிவைக்கப்படலாம்.

கடந்த தேர்தலில் காங்கிரசு தோல்வியடைந்த மாநிலங்களில், காங்கிரசுக் கட்சியை வலுப்படுத்துவது பற்றி ஆராய்ந்தபோது இந்த யோசனை கிளம்பியது.

ஏழை.....ஆனாலும் மகாராஜா! எதிர்ப்பு,....இருந்தாலும் நீடிப்பார்

"'ஏர் இந்தியா' விமான அமைப்பு, தனது 'மகாராஜா' சின்னத்தைக் கைவிடாது"

என்ற திட்டவட்டமான அறிவிப்பை, அதன் தலைவர் ஜே. ஆர். டி. டாட்டா, பம்பாயில் தெரிவித்திருக்கிறார்.

'ஏர் இந்தியா' நிறுவனத்தின் 35-வது ஆண்டு விழாவினையொட்டி அனைத்திந்திய வானொலியில் பேசிய அவர்,

"இந்தச் சின்னஞ் சிறு மகாராஜா, 'ஏர் இந்தியா'வுக்கு நன்கு பயன்பட்டுள்ளார்! மன்னர்களைப்போல் மானியம் கேட்காதவர் இந்த மகாராஜா! காலத்துக்குப் பொருத்தமானவராக இல்லை என்பதை எங்கள் நிறுவனம் ஏற்கத் தயாராக இல்லை! மகாராஜாவைத் தொடர்ந்து வைத்துக்கொள்வதெனத் தீர்மானித்திருக்கிறோம்."

என்று குறிப்பிட்டிருக்கிறார்.

'ஏர் இந்தியா பெற்றிருக்கும் 'மகாராஜா' சின்னத்துக்கும்—அதை மையமாக வைத்து வெளிவரும் விளம்பரங்களுக்கும் எதிராக பாராளுமன்றத்திலும், பத்திரிகைகளிலும் பலமான விமர்சனங்கள்—கண்டனங்கள் வெளிவந்திருக்கின்றன!

எனினும், 'ஏர் இந்தியா'வின்வின் மகாராஜா விளம்பரங்கள், பலமுறை, சர்வதேச முதற் பரிசுகளைப் பெற்றிருக்கின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

கேள்வியும் அவரே—பதிலும் அவரே!

"நேருவின் உறுதிமொழி நிறைவேற்றப்படக்கூடாது என்பதைத்தான், இந்தி மொழி வேண்டுமென்பவர்கள்—வேண்டாமென்பவர்கள் ஆகிய இருவரும் விரும்புகின்றனர்; ஏனெனில் அப்போதுதான் அவர்கள், 'மக்களை ஏமாற்ற முடியும்—ஓ[illegible] வாங்க முடியும்' என்று கருதுகிறேன்."

—நியாகராயநகர் தேர்தல் கூட்டத்தில் கா[illegible]

"'20 ஆண்டுகள் காங்கிரசு ஆட்சி செய்தும், கஷ்டம் தீரவில்லையே' என்று ஏழைகள் குமுறுகின்றனர்' 'ஏழைகளின் கஷ்டம் தீர்ந்துவிட்டது' என்று யார் [illegible]சான்னது?

"ஏழைகளின் கஷ்டம் தீர்ந்துவிட்டால், காங்கிரசுக்கு வேலையே இல்லையே!"

—நியாகராயநகர் தேர்தல் கூட்டத்தில் காமராசர்

கதருக்கு எதிரியல்ல!

கழக ஆட்சியின் நிலைபற்றி அமைச்சர்

கடலூர், அக். 18—

"கைத்தறித் துணிக்குத் தமிழக அரசு உதவும் காலம்வரை, கதருக்கும் உதவி செய்யும் கதர்த் திட்டத்திற்குத் தமிழக அரசு பாதகமாக இருக்காது"

என்று உள்ளாட்சித் துறை அமைச்சர் முத்துசாமி கூறினார்.

"கதர்த் திட்டம், பொருளாதாரத்தை முடக்கிவிடும் என்று தி. மு. கழகம் பிரசாரம் செய்ததே — இப்போது கதர்த் திட்டம் பற்றித் தமிழக அரசின் நிலை என்ன?" என்று செய்தியாளர் ஒருவர் கேட்டபோது, அமைச்சர் எம். முத்துசாமி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

68 குடும்பங்கட்குக் குடிமனைப் பட்டா

அண்ணா வழங்கினார்

காஞ்சி, அக். 14—

காஞ்சியையடுத்த செவிலிமேட்டில், குடிமனைப் பட்டா வழங்கு விழா 13—10—67 இரவு நடைபெற்றது.

முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் விழாவில் கலந்துகொண்டு 68 குடும்பங்கட்கு குடிமனைப் பட்டாக்களை வழங்கினார்.

செங்கற்பட்டு மாவட்டச் சீரணி

அறிஞர் அண்ணா துவக்கிவைத்தார்

காஞ்சீபுரம், அக். 14—

செங்கற்பட்டு மாவட்டச் சீரணி இங்கு முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களால் துவக்கிவைக்கப்பட்டது.

நகராட்சிப் பள்ளித் திடலில் நடைபெற்ற இவ்விழாவுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சிட்டிபாபு தலைமைவகித்தார்.

சென்னைத் தீவிபத்துத் துயர் துடைப்பு நிதிக்காக அண்ணா அவர்களிடம் செங்கற்பட்டு மாவட்ட ஊராட்சி ஒன்றிப்புகள் சார்பில், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. இலட்சுமிகாந்தன் பாரதியால் அளிக்கப்பட்டது.

கும்மிடிப்பூண்டிப் பகுதியைச் சேர்ந்த முன்னாள் இராணுவ வீரரும், சீரணித் தொண்டருமான திரு. அ.அற்புதசாமி, தாம் பெற்ற வீர விருதுகளான போர்க் கருவிகளை அண்ணா அவர்களிடம் ஒப்படைத்தார்.

விழாவையொட்டி, சீரணியினரின் சிறப்பான ஊர்வலம் ஒன்று நடைபெற்றது.

இலஞ்சம் வாங்கியதாக டாக்டர் கைது!

தாரமங்கலம், அக். 16—

சேலம் மாவட்டம் தாரமங்கலம் நகரில் பஞ்சாயத்து யூனியன் நிர்வாகத்தில் (காங்கிரசு) ஒரு மருத்துவமனை உள்ளது; இதில் டாக்டர் என். ஆர். நரசிம்மன் எல்.ஐ.எம். என்பவர் மருத்துவ அதிகாரியாக இருந்தார். கடந்த 27-9-67 அன்று ஒரு நோயாளியிடம் ரூ. 50 இலஞ்சம் வாங்கியதாக சேலம் இலஞ்ச ஒழிப்பு போலீசாரால் கைதுசெய்யப்பட்டார் என்றும், 28—9—67 அன்று சேலம் மாவட்ட நீதிபதி முன்னிலையில் மேற்படி டாக்டர் இரு நபர் ஜாமீனில்—'நெரூரில் (கரூரில்) இருக்கவேண்டும்' என்ற நிபந்தனையின் பேரில் விடுதலை செய்யப்பட்டுள்ளார் என்றும் தகவல் கிடைத்துள்ளது.

இவர் கைதுசெய்யப்பட்டது தாரமங்கலம் வட்டாரத்தில் (அக்கிரகாரத்தில்) பரபரப்பை உண்டாக்கி உள்ளது.

டாக்டர் வீட்டிலிருந்து ஏராளமான தங்க நகைகள் (அடகு) புரோ நோட்டுகளைப் போலீசார் கைப்பற்றிப் புலன் விசாரணை செய்து வருகிறார்கள்.

உண்மை சனநாயகம் மலரத் தமிழகம் வழிகாட்டுகிறது!

மாற்றுக் கருத்துடையோரும் நட்பு முறையில் பழகுதல் நல்ல பலன் தரும்

பக்தவத்சலம் பிறந்த நாள் விழாவில் அறிஞர் அண்ணா பாராட்டுரை

சென்னை, அக். 17—

"இரு வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்கள் ஒருவரையொருவர் தூற்றுவதைவிட, ஒருவர் கூறும் கருத்துக்களின் தன்மையைச் சீர்தூக்கிப் பார்த்து நல்ல கருத்துக்களை எடுத்துக்கொண்டால் நல்ல பலன் கிடைக்கும்.

"மாற்றுக் கட்சிகளைச் சேர்ந்த தலைவர்கள் அரசியலில் கருத்து வேறுபாடு கொண்டிருந்தாலும், நட்பு முறையில் நடந்துகொண்டால்தான் சனநாயகம் வளரும்.

"இத்தகைய தன்மை இங்கிலாந்து நாட்டில் இருந்துவருகிறது. இந்த நல்ல பண்பு நம்மிடம் வரமுடியாது என்று நாம் கருதுவோமேயானால் அது சனநாயகப் பண்பாகாது"

என்று முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் நேற்று, முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலத்தின் பிறந்த நாள் விழாவில் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பி[illegible]ர்.

திரு. பக்தவத்சலத்தின் 71-வது பிறந்த நாளையொட்டி, திருவல்லிக்கேணியில் உள்ள சனநாயக சங்கத்தின் சார்பில் விழா நடத்தப்பட்டது.

முன்னாள் மத்திய அமைச்சர் திரு. சி. ஆர். பட்டாபிராமன் தலைமைவகித்தார்.

பக்தவத்சலத்தைப் பாராட்டி திருவாளர்கள் அ. மு. பரமசிவானந்தம், அகிலன், கே. விநாயகம் எம்.எல்.ஏ., ஜெயா முனுசாமி, சுப்பிரமணிய ஐயர் ஆகியோர் பேசினர்.

திரு. பக்தவத்சலம் பாராட்டுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார்.

அண்ணா அவர்கள் விழாவைத் துவக்கிவைத்துப் பேசுகையில் மேலும் குறிப்பிட்டதாவது :—

"நமது நாட்டில் உண்மையான சனநாயகம் வளரக் கருத்து வேறுபாடு கொண்டவர்கள் ஒருவரையொருவர் சந்திப்பதும், பாராட்டுவதும் ஒரு நல்ல வழியாகும்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், இத்தகைய அரசியலை நடத்திச் செல்லுவதில் முன்னணியில் இருக்கிறோம்.

திரு. பக்தவத்சலம் அவர்கள் இந்தியத் துணைக் கண்டத்தின் உள்நாட்டு அரசியலில் ஐம்பதாண்டுக் காலம் ஈடுபாடு கொண்டவர். அவருடைய சலியாத உழைப்பை — விடா முயற்சியைப் பாராட்டுகிறேன்.

ஒத்த கருத்துக் கொண்டவர்கள் ஒருவரையொருவர் பாராட்டிக் கொள்வதில் வியப்புமில்லை— சிறப்புமில்லை! ஒத்துப்போகாதவர்கள் பாராட்டுவதுதான் தனிச் சிறப்புடையதாகும்!

திரு. பக்தவத்சலம் அவர்கள் ஓர் இயக்கத்தைச் சேர்ந்தவர்; நான் வேறு ஓர் இயக்கத்தைச் சேர்ந்தவன்; இருந்தாலும், இந்தியாவில் உள்ள எல்லா இயக்கங்களும், காங்கிரசுக் கட்சியையே மூலமாகக்கொண்டு தோன்றியவை என்பது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மை.

ஐம்பதாண்டுக் காலமாக நாட்டுக்குச் சிறந்த தொண்டாற்றி வருபவ[illegible]ன்று நாட்டில் விரல்விட்டு [illegible]ணக்கூடிய அளவில்தான் இ[illegible]கிறார்கள். அவர்கள், புதிய த[illegible] முறையி[illegible]ருக்கு வழி காட்டிச் செல்ல[illegible]வேண்டும்.

பெரியார், இ[illegible]ஜி, காமராசர், பக்தவத்சல[illegible] போன்ற அனுபவமிக்க தலைவர்கள் தற்போது வெவ்வேறு திசைகளில் இருந்தாலும், அவர்கள், தமிழ்நாட்டின் நலனில் அக்கறைகொண்டவர்கள் ஆவர். அவர்களிடமிருந்து நாடு மேலும் பலநன்மைகளை எதிர்பார்க்கிறது. அவர்கள் பல்லாண்டு வாழ்ந்து தமிழகத்தின் நல்வாழ்வுக்கு வழி காட்ட வேண்டும்."

ஆற்காட்டு இரட்டையரின் 81-வது பிறந்த நாள்

வரவேற்றுச் சிறப்பித்தது சென்னை மாநகராட்சி

சென்னை, அக். 17—

உலகப் புகழ்பெற்ற அறிஞர்களான டாக்டர் ஏ. இராமசாமி —டாக்டர் ஏ. இலட்சுமணசாமி ஆகியோரின் (ஆற்காட்டு இரட்டையரின்) 81-வது பிறந்த நாளையொட்டி, சென்னை மாநகராட்சி மன்றம், நேற்று அவர்களை வரவேற்று தேநீர் விருந்தளித்துப் பாராட்டிச் சிறப்பித்தது.

மை லேடீஸ் பூங்காவில் இந்த வரவேற்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

மேயர் இரா. சம்பந்தம் விழாவுக்குத் தலைமையேற்று இருவருக்கும் வரவேற்பு மடல் படித்தளித்தார்.

கோபுரம் போன்ற வெள்ளிப் பேழையில் வரவேற்பு மடலை தனித்தனியே வைத்து மேயர் வழங்கிஞர்.

பாராட்டுக்கு நன்றி தெரிவித்து திரு. இராமசாமியும், திரு. இலட்சுமணசாமியும் பேசினர்.

விழாவில் அமைச்சர் நெடுஞ்செழியன், தி. மு. க. அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் உட்பட நகரப் பிரமுகர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

பதிவேடு

"அதிகாரத்திலும் அலுவலகத்திலும் இருப்பவர்கள் வெறும் 'பைல்'களை மட்டும் படிக்க நேரிடுவதால், அவர்கள் மனத்துக்கு அமைதியோ, ஆர்வமோ கிடைப்பதில்லை" —சாக்ளா.

— டைம்ஸ் ஆப் இந்தியா'

★

"காந்தியார் பிறந்த நாளான இந்த அக்டோபர் 2-ல், கடந்த 20 ஆண்டுகளாக இல்லாத அளவுக்கு இந்தியர்கள் அதிக எண்ணிக்கையினர், மதுப் பழக்கத்துக்கு ஆளாயினர்! இது, காலத்தின் கோலம்!"

—'பைனான்சியல் டைம்ஸ்'

★

"சரித்திரம், காங்கிரசுக் கட்சிக்கென ஒதுக்கியுள்ள காலக் கெடுவினின்றும் அது தப்பித்துக்கொள்ள முடியாது!"

—'லிங்க்'

★

"நேற்றைய கதாநாயகன், நாளைய வில்ல[illegible] ஒருவனுடை[illegible] அவன் எந்[illegible] அளவுக்கு [illegible]ளால் விரும்பப்படுகி[illegible] வெறுக்கப்படுகிறான் [illegible] தனை வைத்துத்தான் சே[illegible]கப்படுகிறது!"

—'[illegible]'

★

"பணம் விளைவிக்கும் புதர்களை எப்படி அகற்றுவது என்பதுதான் எங்களது சிந்தனை! பணத்தை அறவே ஒதுக்கும் போக்கினை எப்படி அடைவது என்றுதான் திட்டமிட்[illegible] வருகிறோம்!"

—கியூபாவின் கேஸ்ட்ரோ

★

"அரசியல்வாதிகள், பத்திரிகைக்காரர்களை, 'ஒத்து வராதவர்கள்' என்று கூறுகிறார்கள். பத்திரிகைக்காரர்களோ, அரசியல்வாதிகளை, 'பொருந்தி வராதவர்கள்' என்று கருதுகிறார்கள்! ஆனால், இந்த இரண்டு வகையினருமே, பொதுமக்களைக் குறைகூறுவதில் மட்டும் ஒத்துப் போகின்றனர்!"

—'ஸ்பெக்டேட்டர்'

★

"குடும்பத் திட்டத்தின் முதல் பாதிப்புக்கு ஆளாகி வீழ்ச்சி அடைந்தவர்கள் பட்டியலில், டாக்டர் சந்திரசேகரின் பெயர் சரித்திரத்தில் இடம் பெறும்!

—'சங்கர்ஸ் வீக்லி'

★

"மத்திய ஆட்சியில் உள்ள கல்வி அமைச்சர், இந்தியைக் கல்வி மொழியாக்குவதற்காக நியமிக்கப்பட்டவர் அல்லர்! 'கல்வி' என்பது, மொழிகளைக் கற்றுக்கொடுப்பதற்கும் அப்பாற்பட்டது—மேம்பட்டது!"

—'செஞ்சுரி' வார இதழ்

★

"அரசியல் சட்[illegible]த்தில் குறிப்பிடப்ப[illegible]ராக, [illegible]ரிடை [illegible]முதல் இடுகாடு[illegible] தான் புழக்கத்தில இருந்து வருகிறது!"

—'பாகிஸ்தான் டைம்ஸ்' ஏட்டில் வெளிவந்த கடிதம்; 'ஸ்டேட்ஸ்மன்' இதழில் பிரசுரமானது.

★

"ஜெனிவாவில் புருக்களுக்கும் குடும்பக் கட்டுப்பாடு இருக்கிறது! கருத்தடையைக் கொடுக்கும் மாத்திரையை அவைகளுக்கு வழங்குவதன் மூலம் இனப் பெருக்கம் கட்டுப்படுத்தப்படுகிறது!"

—'மெயில்'

சென்னை 94-வதுவட்ட கே. வி. கே. சாமி மன்றம்

நந்தனம் — சத்தியமூர்த்தி நகர் கே. வி. கே. சாமி மன்றத்தின் புதிய நிர்வாகிகள் தேர்வு, 6—10—67 அன்று 94-வது வட்டச் செயலாளர் ந. மு. வாமணன் தலைமையில் நடைபெற்றது; அதுபோது கீழ்க்கண்டவாறு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :— தலைவர் : வெ. சுப்பிரமணியன்; செயலாளர்: கி. கிருட்டினன்; துணைச்செயலாளர்; இளஞ்சூரியன்: பொருளாளர்: கோ. சுப்பிரமணியன்.



தியாகராயநகரில் திருவிளையாடல்!

'என்ன இராமசாமி?' என்று கேட்டு காமராசர் திரும்பிப் பார்த்ததும், நல்ல வேளையாக தென் சென்னைக் காங்கிரசு வேட்பாளர், 'சி. ஆர். இராமசாமிங்க' என்று பதில் சொல்லவில்லை!

அதற்குள்ளாக, 'செய்வீர்களா, இராஜினாமா?' என்று காமராசர் கேட்டுவிட்டார்!

"முதலில், வெற்றி பெறுவதே குதிரைக் கொம்பாக இருக்கிறது; இவர் வேறு இப்போதே அபசகுனம்போல், இராஜினாமாவுக்குப் போய்விட்டாரே" என்று நினைத்தோ—அல்லது, "நல்ல வேளை; 'என்ன இராமசாமி' என்று தலையெழுத்தைத்தான் கேட்கிறாரோ என்று, 'சி. ஆர். இராமசாமி' என்று சொல்லாமலிருந்தோமே" என்ற சாமர்த்தியத்தை நினைத்தோ —வேட்பாளர் சிரித்தாராம்!

இதுவரையில், 'மொழிப் பிரச்சினையை வீணுகத் தேர்தலுக்கு இழுப்பதாக'த் தி. மு. கழகத்தின்மீது வீணுகப் பழி கூறிவந்த காங்கிரசுத் தலைவர், தானும் அதே மொழிப் பிரச்சினையை, தியாகராயநகர் கூட்டத்தில் முன்வைத்துப் பேசியிருக்கிறார்!

'நேருவின் உறுதிமொழி சட்டமாகாவிடில், தனது கட்சி உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்வார்' என்ற திடீர் அறிவிப்பை வெளியிட்டுவிட்டுத்தான், என்ன இராமசாமி? செய்வீர்களா?' என்று, மேடையின் பின்பக்கம் நாடக பாணியில் திரும்பிப் பார்த்துப் பேசியிருக்கிறார் காமராசர்!

★ நேருவின் உறுதிமொழி இதுவரையில் சட்டமாகாதற்கு, இப்போது இருக்கும் உறுப்பினர்கள் முதலில் இராஜினுமாச் செய்யத் தயாரா?

★ சி. ஆர். இராமசாமி வெற்றி பெற்றால்தான் பதவியைத் துறக்க முடியும்; ஆனால் இப்போது இருப்பவர்கள் அதை உடனடியாகச் செய்யலாம்; அனுமதிப்பாரா காமராசர்?

★ 'தமிழ் காக்கப்பட மாறன் மட்டும்தான் தகுதியா?" என்று -- அண்ணா அவர்களின் பேச்சைத் தவறாகத் திரித்துக் கேட்ட பக்தவத்சலம் -- இப்போது அதே முறையில், 'நேருவின் உறுதிமொழி சட்ட வடிவம் பெற ஒரே ஒரு சி. ஆர். இராமசாமி வெற்றி பெற்றால்தான் முடியுமா?' என்று கேட்டால், என்ன பதில் சொல்லுவார்?

★ காமராசர், சுப்பிரமணியம், அழகேசன் போன்றோர் முயன்று முடியாததையா இந்த சி. ஆர். இராமசாமி முடித்துவிடுவார்? அப்படியாவது வெளிப்படையாக ஒப்புக்கொள்ளத் தயாரா?

★ 'நேருவின் உறுதிமொழி என்றால் எந்த உறுதிமொழி? இரண்டு உறுதிமொழிகள் இருப்பது தெரியுமா? அதில் ஒன்று, 'ஆங்கிலத்துக்குச் சட்ட ரீதியான பாதுகாப்பு அளிக்கவில்லை' என்பது தெரியுமா?

'நேருவின் உறுதிமொழி' என்பதிலும், அது, 'சட்டமாவது' என்பதிலும் இத்தனைப் பிரச்சினைகள் இருப்பதனால்தான்—அதனைப் புரிந்து கொண்டிருப்பதனால்தான்—தென் சென்னையின் காங்கிரசு வேட்பாளர், காமராசரின் கேள்விக்குச் சிரித்தே மழுப்பியிருக்கிறார்!

இல்லையென்றால், வாய்விட்டுச் சொல்லியிருப்பாரே பதிலை! 'இது தேர்தல் திருவிளையாடல்; கலப்போம் ஜோதியில்' என்று அமைதிப் புன்னகை விடுத்திருக்கிறார்--வேட்பாளராக ஆக்கப்பட்டிருப்பவர்!

—எஸ். ஆர்.

அமைச்சர்

கருணாநிதிக்கு வாழ்த்து

பன்மொழிக் கவியரங்கம்

1—11—67 காலை 8-30 மணிக்கு தியாகராயநகர் வாணி மகாலில், மாண்புமிகு அமைச்சர் மு. கருணாநிதி அவர்களை வாழ்த்திப் பாராட்டும் வகையில், தமிழ்—தெலுங்கு—கன்னடம்—மலையாளம் - உருது ஆங்கிலம்—வடமொழி ஆகிய பல மொழி கவிஞர்கள் பங்குகொள்ளும் 'பன்மொழிக் கவியரங்கம்' பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

"பல கட்சித் தலைவர்கள்—தமிழறிஞர்கள்—கலைஞர்கள் - மற்றும் பலர் விழாவில் பங்குகொண்டு சிறப்புரை வழங்குவர்" என்று கலைவாணர் நிலையச் சார்பில் திரு. வெ. நாராயணன் அறிவிக்கிறார்.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

★

19--10--67

மானமதுரை

தி. மு. க. சார்பில் இரவு 7 மணிக்கு, கன்னர் தெருவில்; தலைவர்: மு. அழகப்பன்; பேசுவோர்: தா, கிருட்டினன் எம்.ஏ., எம்.பி., கோவை மு. இராமநாதன், பொ. குமரன்.

இட்லரின் வாரிசுகளாக...

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

செத்த பிணங்களை எண்ணிப் பார்க்கவேண்டிய தளபதி, தன் பொத்தான்களை எண்ணிப் பாாத்திடாது திணறுவாராம்! 'இது தெரியாத நீ எப்படி களத்திலே வெற்றி பெறப் போகிருய்?' என்று இட்லர் மிரட்டுவாணும்!

" அதே விதமாக, இங்கே காங்கிரசு அமைச்சர்கள் மிரட்டி வந்தார்கள்!"

---அறிஞர் அண்ணு

ஆறு மாத சாதனைக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள்; ஆனல், அகில இந்தியக் காங்கிரசுத் தலைவர் காமராசரோ, 'நான் விடமாட்டேன்' என்கிருர்!

உலகுக்குத் தெரிவியுங்கள்!

இந்நேரத்தில், மக்கள், ஒன்றைத் தெளிவாக அவர்களுக்குத் தெரிவித்துவிட வேண்டும்; 'பிப்ரவரியில் அளித்த தீர்ப்பையே நவம்பரிலும் அளிப்போம்' என்பதைத் தெளிவாக்கிட வேண்டும்!

நீங்கள், 'சுயபுத்தியோடு வாக்களிக்கவில்லை' என்கிருர் பக்தவத்சலம்! நவம்பர் 7-ந்தேதி நீங்கள் போடுகிற ஓட்டின்மூலம் நீங்கள், 'போதையோடு ஓட்டளிக்கவில்லை; விவரமறிந்து தெளிவோடுதான் செய்திருக்கிறோம்' என்பதை, ஊருக்கும் உலகுக்கும் மெய்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்."

ஈக்காட்டுக்கு அமைச்சர்கள் வருகை

ஊராட்சிமன்றம் வரவேற்கும்

ஈக்காடு ஊராட்சிமன்றச் சார்பில் 19—10—67 மாலை 5-மணிக்கு ஊராட்சிமன்றத் தலைவர் திரு. து. எத்திராசன் தலைமையில் முதலமைச்சர் அறிஞர் அண்ணு, மற்றும் அமைச்சர்கள் கே. ஏ. மதியழகன், ஏ. கோவிந்தசாமி, மா. முத்துச்சாமி, டாக்டர் சத்தியவாணிமுத்து, நாடாளுமன்றஉறுப்பினர் எஸ். கே. சம்பந்தம், சட்டமன்ற உறுப்பினர்கள் சி. வி. எம். அண்ணுமலை, எஸ். எம். துரைராஜ், கா. வேழவேந்தன் ஆகியோருக்கு வரவேற்பளிக்கப்படும்.

பாரதியார் படத்தை அமைச்சர் முத்துச்சாமியும், அறிஞர் அண்ணு படத்தை திரு. சி.வி.எம். அண்ணுமலையும், வள்ளுவர் படத்தை திரு. கி. இலட்சுமிகாந்தன் பாரதியும், ஜி. முனுசாமி ரெட்டியார் படத்தை திரு. ஜி. ஆர். இராதாகிருட்டினனும் திறந்துவைப்பார்கள்.

(5-ம் பத்தி தொடர்ச்சி)

" பேச்சு வார்த்தைக்காகப் புதுடில்லிக்கு வந்த அவர்கள் குழுவினர் தோல்வியுடன் திரும்பியது, இந்திராவும்— இந்திய அரசும் காட்டிய இராசதந்திரமற்ற போக்கின் விளைவுதான்" என்ற ஒரு கருத்து இருப்பது இங்கு நினைவுகூரத்தக்கது.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அச்சகத்தில் (24, வண செங்குத் தெரு, சென்னை-1) அச்சிட்டு வெளியிடப்பட்டது.

மாநகராட்சி விளையாட்டுத் திடல்

என். வி. நடராசன் திறந்துவைப்பார்

சென்னை—மயிலாப்பூர் தலையாரி தெருவிலுள்ள மாநகராட்சி சிறுவர் விளையாட்டுத் திடலை 18-10-67 மாலை 5 மணிக்கு மேயர் இரா. சம்பந்தம் தலைமையிலும் — இராம. அரங்கண்ணல் எம்.எல்.ஏ. முன்னிலையிலும் திரு. என்.வி. நடராசன் எம்.எல்.சி. திறந்துவைப்பார்.

ஆத்தூர்--தலைவாசல் தொகுதிகளுக்கு அமைச்சர்கள் வருகை

"உள்ளாட்சித் துறையமைச்சர் திரு. முத்துசாமி அவர்கள் 8—11—67 அன்றும், உணவமைச்சர் திரு மதியழகன் அவர்கள் 13—11—67 அன்றும் சேலம் ஆத்தூர்—தலைவாசல் தொகுதிகளில் சுற்றுப்பயணம் செய்து பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள இசைவளித்திருக்கிருர்கள்"

என்று ஆத்தூர் வட்டச் செயலாளர் டி. கே. மாதவன் அறிவிக்கிருர்.

முகவரி மாற்றம்

காஞ்சி. கல்யாணசுந்தரன்
5/B-12, வெளிவட்டத் தெரு,
கீழ்ப்பாக்கம் தோட்டக்
சென்னை-10. [குடியிருப்பு

முகவரி:

ஜி. என். பெரியசாமி
பொதுக்குழு உறுப்பினர்,
கூடமலை அஞ்சல்,
ஆத்தூர் வட்டம்,
சேலம் மாவட்டம்.

தீபாவளிக்கு விசேஷ தள்ளுபடி

10%

18-10-67 முதல் 1-11-67 வரை

கோ-ஆப்டெக்ஸ்

கைத்தறித்துணி விற்பனையில்...

இந்த தள்ளுபடி மேற்கு வங்காளம், பீஹார், ஒரிஸ்ஸா, மைசூர், கேரள மாநிலங்கள் தவிர இதர எல்லா "கோ-ஆப்டெக்ஸ்" விற்பனை நிலையங்களிலும், பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிலும் கிடைக்கும்.

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட்,
'பாலசுந்தரம் கட்டிடம்' எழும்பூர் சென்னை-8.

ELEGANT

கூட்டணி இருக்கட்டும்--உங்கள் வீட்டணியின் நிலை என்ன?

"கூட்டணி ஆட்சி நடக்கும் மாநிலங்களில் உள்ள மந்திரிகளிடையேகூட இப்போது ஒற்றுமை இல்லை; ஒரு மந்திரி மற்ரெரு மந்திரியை நேரடியாகவே தாக்கிப் பேசுகிருர்; 'இராஜினுமாச் செய்துவிடுவோம்' என்று மிரட்டுகிருர்கள்; அவர்களுக்குள் ஒற்றுமை இல்லை"

இப்படி, தியாகராயநகரில் நடைபெற்ற தென் சென்னைத் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் காமராசர் பேசியிருக்கிருர்.

பாவம்! புதுடில்லியிலிருந்து திரும்பி சில மணி நேரங்கள் தானே ஆகின்றன? எனவே, காங்கிரசு நிலைமைகளை அப்படியே மறக்காமல் பேசியிருக்கிருர்!

- ★ சோஷலிசம்
- ★ தேசியமயம்
- ★ மன்னர் மானியம்
- ★ பொது மொழி
- ★ வெளிநாட்டுக் கொள்கை
- ★ மதுவிலக்கு

இப்படி ஏதாவது ஒன்றின் அடிப்படைக் கொள்கைகளிலாவது—எந்தக் காங்கிரசு அமைச்சரவையிலாவது—மத்திய அரசிலாவது—அல்லது நிர்வாகத்தில் இல்லாத கட்சித் தலைவர்களிடமாவது ஒருமித்த கருத்து இருக்கிறது என காமராசர் ஒப்புக்கொள்ள முடியுமா?

நவக்கிரகங்களாவது, எண்ணிக்கை அடிப்படையில்—பெயருக்கேற்றுற்போல்—ஒன்பது திக்குகளைப் பார்க்கின்றனவாம்! ஆனல், காங்கிரசுக்காரர்கள் ஒவ்வொருவரும், ஒவ்வொரு திக்கை அல்லவா நோக்குகிருர்கள்?

போகிற போக்கில், 'காங்கிரசுக்காரர் என்ருல் எந்தக் காங்கிரசுக்காரர்' என்றல்லவா கேட்க வேண்டி[...]

பல கட்சிகள்--நிர்வாகத்துக்கு ஒன்று[...] யில் குறை காணும் காமராசர், த[...] 'உயிர் மூச்சுக் கொள்கை' ஒன்[...] நிலவாததற்கு என்ன பதில் சொல்லமுடியும்?

காங்கிரசின் அடிப்படைக் கொள்கைகள் கொண்ட பத்து அம்சத் திட்டம், பெட்டிக்குள் போய்ப்போய் திரும்புகிறதே!

பாட்டில் அதற்கு எதிர்பாக வெளிப்படையாகவே மறுப்பு தெரிவிக்கிருரே!

சிக்கிம்—வியட்நாம்--ஐரோப்பியப் பொதுச் சந்தை—சீன—ஜெர்மனி ஆகிய கொள்கைகள் பற்றி மொரார்ஜி வெளிநாடுகளில் தெரிவித்துவிட்டு வந்த கருத்துக்கள், அரசியல் சந்துமுனைகளிலெல்லாம் கைகொட்டிச் சிரிக்கப்படுகின்றனவே!

மத்திய அமைச்சர்கள் ஒருவரையொருவர் தாக்கிக்கொள்ளாத வகையிலா கூட்டணி அமைச்சர்கள் ஒருவரையொருவர் தாக்கிப் பேசுகின்றனர்?

மொரார்ஜியும்—இந்திராவும் கருத்தொருமித்தவர்களா? அல்லது, காங்கிரசுத் தலைமையமைச்சரும் இந்தியத் தலைமையமைச்சரும்தான் ஒரே கொள்கை உடையவர்களா?

சாக்ளாவும்—தேசாயும் எப்படி என்பதை, ஊர் உலகம் அறியாதா?

மத்திய அமைச்சரவையில் இரயில்வேத்துறை, தபால்-தந்தி துறையைத் தாக்குவதும்—வெளிநாட்டு விவகாரம், உள்நாட்டுத் துறையுடன் மோதுவதும்—வர்த்தகத்துறை, வரி இலாகாமீது வெறுப்புக் காட்டுவதும்—நீர்ப்பாசனத்துறை, அனல் மின்சாரத் துறையைக் காய்வதும்—சுரங்க இலாகா, தொல்பொருள் துறையை மூடிமறைப்பதும், நேருவின் காலந்தொட்டே பத்திரிகை உலகில் அவ்வப்போது வெளிவரும் 'சைட் லைட்' செய்திகளாயிற்றே!

காங்கிரசில் 'இட'மென்றும் 'வல'மென்றும், அதற்கிடையில், 'நடு' என்றும் 'தீவிரம்' என்றும், 'அதிவேகம்' என்றும் ஒப்புக்கொள்ளப்பட்ட பிரிவுகள் பல ஆண்டுகளாக இயங்கிவருகின்றனவே!

காமராசரே, 'எந்தக் காங்கிரசுக் கட்சிக்குத் தலைவர்?' என்று அரசியல் உலகில், அடிக்கடி வேடிக்கையான கேள்வி ஒன்றைக் கேட்பது உண்டே!

உங்கள் நன்மைக்காகவே கூறுகிறோம்—காமராசர் அவர்களே! தயவுசெய்து இப்படிப்பட்ட பிரச்சினைக்குட்பட்ட தலைப்புகளை—அதுவும், 'தேர்தல் பிரச்சாரத்துக்கு' எனத் தேர்ந்தெடுத்துக் கொள்ளாதீர்!

அதை ஆராய்வதில் உங்கள் தகுதி என்னவோ தெரியாது; ஆனல் பாவம்! வேட்பாளர் என்னவோ உங்களைத்தான் நம்பியிருக்கிருர்!

—'பாக்சர்'

தலைமறைவு நாகர்கட்கு [...]பாகிஸ்தான் இராணுவ உதவி

[...] உடன்பாடு காற்றில் பறக்கிறது!

"இ[...]பத்[...] தலைமையமைச்ச[...] மேற்கொண்ட பேச்சு [...]ர்த்தை நகள் தோல்வியடைந்ததை அடுத்து தலைமறை[...] நாகர்கள், தங்கள் தாக்கு[...]ல் நடவடிக்கைகளுக்காக, சீன — பாகிஸ்தான் ஆகிய[...] நாடுகளிலிருந்து ஆயுத உதவி பெறுவது என முடிவு செய்[...]ள்ளனர்"

என, இ[...]பால் செய்தி ஒன்று கூறுகிறது.

இத்தொடர்பில் அவர்களது தூதுக்குழு, சீன, பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு செல்லக்கூடும் என்ற ஒரு நிலையும் இருப்பதாகத் தெரிகிறது.

1964-ஆம் ஆண்டில் இந்திய அரசுடன் நாகர்கள் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தம், 'வெளிநாட்டு ஆயுத உதவிகளைப் பெறக்கூடாது' என்பது பற்றிக் குறிப்பாக நிபந்தனை ஏதும் விதிக்கவில்லையென்ருலும், 'கலக நாகர்கள், ஆயுதங்களைக் கையாளுவதே கூடாது' என்ற பொதுவான கட்டுப்பாடு இருப்பதனையும் மீறி அவர்கள் மேற்கண்ட முடிவு எடுத்திருப்பதாகத் தெரிகிறது.

(1-ம் பத்தி பார்க்க)